OS.No.:106/2022

நாள் : 04.06.2024

வா.சா. : 1

பெயர் : சௌரிராஜன்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ராமசொக்கலிங்கம் எழுதி வைத்த உயிலில் trusty என்று உள்ளதை நீக்கம் செய்யும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து வருவாய் துறை ஆவணங்களில் சுப்பராமன் Trust என்று உள்ளது என்றால் சரி. தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் ராமசொக்கலிங்கம் என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்ட சொத்துகள் என்றால் சரி. அந்த ராமசொக்கலிங்கம் எனது சித்தப்பா (எனது அப்பாவின் தம்பி). அந்த ராமசொக்கலிங்கத்தின் உடன் பிறந்தவர்கள் என் அப்பா ரெங்கநாதன் மற்றும் முத்தையாபிள்ளை ஆகியோர். எனது அப்பா ரெங்கநாதனுக்கு பாலசுப்ரமணியன், சௌரிராஜன்(நான்), ஞானசம்பந்தம், தியாகராஜன் ஆகியோர் மகன்கள். பெண் குழந்தைகள் இல்லை. ராமசொக்கலிங்கத்திற்கு திருமணமானது. ஆனால் குழந்தைகள் இல்லை. அவரது மனைவியின் பெயர் பங்கஜவள்ளி. அவரும் இறந்துவிட்டார். முத்தாபிள்ளைக்கு ஒரு மகன், மூன்று மகள்கள் திருநாராயணன், ராஜாத்தி, ஆண்டாள், கஸ்தூரி ஆகி யோர். கஸ்தூரியை தவிர மற்றவர்கள் இறந்துவிட்டார்கள். திருநாராயணன், ராஜாத்தி, ஆண்டாள், கஸ்தூரி ஆகியோருக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரி. அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி. அவர்களை பற்றிய விவரத்தையும் அவர்களை ஏன் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்ற விவரத்தையும் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி. தாவா சொத்து ராமசொக்கலிங்கத்தின் சொத்து என்பதால் மேற்படி நபர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு குறையுற்ற வழக்கு என்றால் சரியல்ல. ராமசொக்கலிங்கம் 2005 ல் எழுதி வைத்த உயிலில் எத்தனை ஷெட்யூல் சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் 2 ஷெட்யூல். அந்த உயிலில் கண்ட ஏ ஷெட்யூல் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது. பி ஷெட்யூல் சொத்து சுப்பராமன்

Trust க்கு எழுதி வைக்கப்பட்டுள்ளது. பி ஷெட்யூல் சொத்து குறித்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. ராமசொக்கலிங்கம் உயிருடன் இருக்கும் போது சுப்பராமன் Trust என்று ஒன்றை ஏற்படுத்தி பி ஷெட்யூல் சொத்துக்களை அந்த Trust க்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள Ex.A.7 ஆவணத்தில் (உயில் பத்திரத்தில்) என்னால் நிறுவப்பட்டிருக்கும் " சுப்பராமன் டிரஸ்ட் " -க்காக இதனடியில் விவரிக்கப்பட்டுள்ள "B" ஷெட்யூலில் கண்டுள்ள சொத்தில் இருந்து வருமானத்தில் 10% அபிவிருத்திக்காகவும் மற்றும் மீதமுள்ள தொகையில் தர்ம காரியத்திற்கும் அவரே பயன்படுத்திக் கொண்டு பராமரித்து வரவேண்டியது. மேற்படி ஷெட்யூல்களில் ஏதேனும் விடுபட்டு இருந்தால் அவரையே சாரும். அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் B பட்டியல் சொத்துக்கள் சுப்பராமன் Trust க்கு பாத்தியப்பட்டது என்று வருவாய் துறை ஆவணங்களில் பதிவாகி இதுவரை பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரி. ஆனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் " ராமசொக்கலிங்கம் பிள்ளை "சுப்பராமன் டிரஸ்ட் " என்ற பெயரில் எவ்வித டிரஸ்ட்டும் ஏற்படுத்தவில்லை. அந்த மாதிரி ஒரு டிரஸ்ட் எந்த காலத்திலும் ஏற்படுத்தப்படவில்லை. ராமசொக்கலிங்கம் பிள்ளைக்கு டிரஸ்ட் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதுபோல டிரஸ்ட் ஏற்படுத்தப்படாத நிலையில் அந்த சொத்துக்கள் வாதிக்கு மட்டுமே சேர வேண்டிய சொத்துக்களாகும் " என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள EX.A. 5 மற்றும் 6 ல் சுப்பராமன் Trust க்கான பாதுகாவலர் சௌரிராஜன் என்று தான் உள்ளது என்றால் சரி. பட்டாவில் தவறுதலாக சுப்பராமன் Trust பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. பட்டா மற்றும் சிட்டாவில் சுப்பராமன் Trust தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளதாக கோட்டாச்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஆனால் அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. உரிய அலுவலகத்தை அணுகாமல் நேரடியாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. அப்படி வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் தவறு. உரிமை உள்ளது.

சுப்பராமன் Trust தற்போது வரை இயங்கி வருகிறது என்றாலும், அந்த சொத்தை அபகரிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் தவறு. உரிய தரப்பினர்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. வழக்கை அனுமதிக்க வேண்டும்.